# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 03 - 2024*

**அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**கல்வி – 20.01.2024 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 16.03.2024**

அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 2024 விபரம் – எழுத்து மற்றும் ஒலிவடிவத்துடன்

**கலைவகுப்புகள் - 20.01.2024 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**தைப்பொங்கல் விழா 2024 இனிதே நடந்தேறியது.**

13.01.2024 அன்று அனைத்து வளாகங்களும் இணைந்து நடத்திய அன்னையின் தமிழர் திருநாள் விழா இனிதே நடந்தேறியது. இவ் விழா இனிதே நடைபெற உதவி புரிந்த ஆசிரியர்களே! மாணவர்களே! பெற்றோர்குழுவினரே! தேநீர்ச்சாலை குழுவினரே! பெற்றோர்களே!

முதற்கண் உங்கள் அனைவருக்கும் நன்றியுடன் கூடிய பாராட்டுகள். உங்களோடு இணைந்து பணி செய்வதையிட்டு பெருமை கொள்கின்றோம். நடந்த பொங்கல் விழா அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

விழாவுக்கு வந்த அனைவரினதும் பேசு பொருளாக இருந்தது எமது வளாகத்தின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்குழு, நேநீர்ச்சாலைகுழு, பெற்றோர்கள் மற்றும் வளாகத்தின் நலன் விரும்பிகளின் செயற்பாடுகள்.

குறுக்கிய நாட்களுக்குள் உங்கள் வேலைகளுக்கு மத்தியில் இரவு பகலாக நேரத்தை செலவழித்து பணிசெய்த உங்களை அனைவருக்கும் மீண்டும் நன்றியுடன் பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

**கலந்துரையாடல்**

பெற்றோர்குழு மற்றும் பெற்றோர் பிரதிநிதிகளுடன் நிர்வாக தொடர்பாளர் சந்திப்பு.

நேரம்:11.30 – 12.15 வரை.

## நிதி

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

**ஆண்டுக்கூட்டம் 2024 – 02.03.2024 (புதிய திகதி)**

ஆண்டுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் சார்பாக ஏதாவது விடையங்கள் கொண்டுவரவிரும்பின் எமக்கு 31.01.2024 இற்கு முன்னதாக மின்னஞ்சலினூடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். வழங்கப்பட்ட நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கப்படும் விடையங்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும். **ஏற்கனவே அறிவித்ததுபோல் முழுமையான உறுப்பினர் உரிமை பெற்றவர்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியும்.**

## விளையாட்டுப்போட்டி 2024 - பெற்றோர் கூட்டம் 09.03.2024

**சிற்றுண்டிச்சாலை இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.**

*10:15 முதல் வழமைபோல் மேல்க்கட்டிடத்தில் சிற்றுண்டிகள் விற்பனையில் இருக்கும் அனைவரும் அவ்வேளை வந்து பிள்ளைகளுக்காகவோ அல்லது தங்களுக்காகவோ தேவையானவற்றை வாங்கலாம். **தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேனீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும். புரிந்துணர்வுக்கு நன்றி.***

***முக்கிய கவனம் மற்றும் வேண்டுகோள்!!!!***

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* **(brannalarm)**, *அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும்.*
   *அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil, ambulanse osv)** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*
   *வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*

   *எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil, ambulanse osv)** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

**கவனத்தில் கொள்ளவும்!!!**

*எதிர்வரும் சனிக்கிழமை - போக்குவரத்தில் கவனம் கொள்ளவும்.*

*காலநிலை மற்றும் நிலவழுக்கல் காரணமாக பாடசாலையில் இருந்து செல்பவர்கள் பாடசாலையை நோக்கிவருபவர்களுக்கு இடம்விட்டு செல்லும்படி கேட்டுக்கொள்கின்றோம்.*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!